# ஏப்ரல் - 27 – சனி

## தூய எகிப்து மரியம்மாள்

### “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள்” – மாற்கு 16 :15

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 4 : 13 - 21**

அந்நாட்களில் பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதைத் தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால், அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்தனர் அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர். நலம்பெற்ற மனிதர் அவர்களோடு நிற்பதைக் கண்டதால் அவர்களால் ஒன்றும் மறுத்துப் பேசமுடியவில்லை. எனவே அவர்கள் பேதுருவையும் யோவானையும் சங்கத்தைவிட்டு வெளியேறும்படி ஆணையிட்டு, பின்பு தங்களுக்குள் இது குறித்துக் கலந்து பேசினார்கள். ”நாம் இந்த மனிதர்களை என்ன செய்யலாம்? ஏனென்றால் குறிப்பிடத்தக்க ஓர் அரும் அடையாளத்தை இவர்கள் செய்துள்ளார்கள் இது எருசலேமில் வாழும் அனைவருக்கும் தெரியும். இதை நாம் மறுக்க முடியாது. ஆகவே இச்செய்தி மேலும் மக்களிடையே பரவாமலிருக்குமாறு இந்த இயேசுவைக் குறித்து யாரிடமும் பேசக் கூடாதென நாம் இவர்களை அச்சுறுத்தி வைப்போம்” என்று கூறினார்கள். அதன் பின்பு தலைமைச் சங்கத்தார் அவர்களை அழைத்து, ”இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோ கூடாது” என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டனர். அதற்குப் பேதுருவும் யோவானும் மறுமொழியாக, ”உங்களுக்குச் செவிசாய்ப்பதா? கடவுளுக்குச் செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” என்றனர். அவர்களைத் தண்டிப்பதற்கு வேறு வழி கண்டுபிடிக்க முடியாததாலும், மக்களுக்கு அஞ்சியதாலும் தலைமைச் சங்கத்தார் அவர்களை மீண்டும் அச்சுறுத்தி விடுதலை செய்தனர். ஏனென்றால் நடந்ததைக் குறித்து மக்கள் அனைவரும் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! என் மன்றாட்டை நீர் கேட்டதால் நான் நன்றி செலுத்துகிறேன்.

**நற்செய்தி : மாற்கு 16 : 9 – 15**

வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு அவர் முதலில் மகதலா மரியாவுக்குத் தோன்றினார். அவரிடமிருந்துதான் அவர் ஏழு பேய்களை ஓட்டியிருந்தார். மரியா புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் இதை அறிவித்தார். அவர்கள் துயருற்று அழுதுகொண்டிருந்தார்கள். அவர் உயிரோடு இருக்கிறார் என்றும் மரியா அவரைக் கண்டார் என்றும் கேட்டபோது அவர்கள் நம்பவில்லை. அதன்பிறகு அவர்களுள் இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார். அவர்கள் சென்று அதனை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள் அவர்கள் சொன்னதையும் சீடர்கள் நம்பவில்லை. இறுதியாகப் பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்தபொழுது அவர்களுக்கு இயேசு தோன்றினார். உயிருடன் எழுப்பப்பட்ட தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாமல் அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால் அவர் அவர்களுடைய நம்பிக்கையின்மையைக் கண்டித்தார். இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தியில் இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்று சொல்வதனை சீடர்கள் நம்பவில்லை என்ற அடிப்படையில் தியானிக்கும்போது, கிறிஸ்துவின் சீடர்கள் இறை பிரசன்னத்தையோ, அல்லது கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையோ ஏற்க மறுத்ததாக அர்த்தம் கொள்ளாது, அவர் உயிர்தெழுந்துவிட்டார், அவரை நான் கண்டேன் என்று சொல்பவர்கள் தெரிவித்த அடையாளங்களின் அடிப்படையிலேயே சீடர்கள் அதனை ஏற்கமறுத்தனர் எனக்கொள்ளலாம். ஏனெனில் இறந்த கிறிஸ்து உயிர்த்துவிட்டார் என்பதனை சாதாரன மனித அறிவிற்கு அமைவாக நம்புவதற்கும் மேலாக, தீர்க்கதரிசிகளாலும், இறைவாக்கினர்களாலும் முன்னுரைக்கப் பட்டவைகளுக்கு அமைவாக எமதுள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பும் விசுவாசத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்வதே உண்மையான கிறிஸ்தவ விசுவாசமாகும். இதனாலேயே உயிர்த்த கிறிஸ்து பிறிதொரிடத்தில் தமது சீடர்களது மத்தியிலே தோன்றியபோது “கண்டு விசுவசிப்பவனை விடக்காணாமல் விசுவசிப்பவன் பாக்கியவான்” எனக்கூறியுள்ளதாக நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். இப்படிப்பட்ட கிறிஸ்தவ விசுவாசத்தையே உயிர்த்த கிறிஸ்துவும் ஆதியில் தமது அப்போஸ்தலர்களிடம் மட்டுமல்ல, கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்ற நாமத்தினால், திருமுழுக்குப் பெற்றுள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றார். கல்வியறிவற்ற பேதுருவும், யோவானும் தலைமைச் சங்கத்தார் முன்னிலையில் எவ்வாறு கிறிஸ்துவுக்குச் சாட்சியாக துணிவோடு நின்றிருந்தார்களோ அவ்வாறு நாமும் எம்மத்தியில் வாழ்பவர்கள் முன்னிலையில் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக எமது வாழ்க்கை முறைகளை மாற்றியமைப்போம். எமது பழக்கவழக்கங்களைப், பாவச்செயல்களை உடனடியாக மாற்ற முடியாவிடினும், சிறிது சிறிதாக அவற்றிலிருந்து விடுபட்டு புதுவாழ்வு வாழ முயற்சி செய்வோம். இதுவே இவ்வுலகில் நாம் பரப்புகின்ற நற்செய்தியாக மாற்றம் பெறட்டும்.